பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 43** **நாள்: 19.02.2019**

## இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, மாற்றுத்திறனாளிகளை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது

இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2019ல் அனைவரும் அணுகத்தக்க தேர்தல்கள் மற்றும் “எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது” (No Voter to be left behind) என்ற குறிக்கோளுடன் 18 வயது பூர்த்தியடைந்த அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக பல்வேறு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, 18வயது பூர்த்தியடைந்த அனைவரையும் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் இணை ஆணையாளர் (வ (ம) நி) அவர்கள் முன்னிலையில் இன்று (19.02.2019) சென்னை கீழ்ப்பாக்கம் மனநல காப்பகவாசிகளை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில், மனநல காப்பகவாசிகள் 129 நபர்கள் தம்முடைய பெயர்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ள விண்ணப்பங்களை அளித்தனர். இதனைத் தொடர்ந்து இவர்கள் அனைவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை விரைவில் வழங்கப்பட உள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**